பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
04 02 2025 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

1. நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை வளர்ச்சியடைந்த இந்தியா தீர்மானத்தை வலுப்படுத்துவதாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளர்.
2. எதிர்காலத்தில் எத்தகைய பெருந்தொற்றுகளையும் எதிர்கொள்ளும் வகையில் நாட்டில் மருத்துவ கட்டமைப்புகள் மேம்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் ஒரு லட்சத்து 57 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இனை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா கூறியுள்ளார்.
4. ஐ நா பொதுச்சபைத் தலைவர் திரு **Philemon yang** நான்கு நாள் பயணமாக இன்று மாலை இந்தியா வந்தடைந்தார்.
5. சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிதாந்த் பாந்தியா, பரிக்ஷித் சொமானி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரை வளர்ச்சியடைந்த இந்தியா தீர்மானத்தை வலுப்படுத்துவதாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மக்களவையில் இன்று பதிலளித்து பேசிய அவர், குடியரசுத் தலைவரின் உரை சாமானிய மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும், அவர்களிடையே புதிய நம்பிக்கையை கட்டமைக்கும் விதமாகவும் இருந்ததாக பாராட்டு தெரிவித்தார்.

நாட்டில் 25 கோடி பேர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்றும், மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளே அதற்குக் காரணம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜல்ஜீவன் திட்டத்தின் மூலம் நாட்டில் 12 கோடிக்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் நீர் வழியாக பரவும் தொற்று நோய்கள் குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக பிரதமர் கூறினார்.

நாடு முழுவதும் 12 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை வருமானம் பெறுவோருக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பது நடுத்தர மக்களின் வாழ்வை மேம்படுத்தும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டு மக்களின் தேவைகளுக்கு தீர்வு கா ணும் வகையில் மத்திய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும், நாட்டில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் தொடர்பான விவாதத்திற்கு தாம் 14-வது முறையாக பதிலளிப்பதாகவும், இந்த வாய்ப்பினை அளித்த நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து கொள்வதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

[]<<<>>>[]

எதிர்காலத்தில் எத்தகைய பெருந்தொற்றுகளையும் எதிர்கொள்ளும் வகையில் நாட்டில் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், நோய் கட்டுப்பாட்டுக்கான தேசிய மையம் பெருந்தொற்று பரவலை விழிப்புடன் கண்காணித்து வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் இரண்டு ஆய்வகங்கள் உட்பட நாடு முழுவதும் 150 வைரஸ் ஆராய்ச்சி மையங்கள் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக திரு ஜெ பி நட்டா கூறினார்.

[]<<<>>>[]

கடந்த பத்து ஆண்டுகளில் மொபைல் மற்றும் மின்னணு சாதன உற்பத்தியில் நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டிருப்பதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளப் பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், 2014-ஆம் ஆண்டு நாட்டில் இரண்டு மொபைல் உற்பத்தி யூனிட்டுகள் இருந்ததாகவும், தற்போது அந்த எண்ணிக்கை 300-ஆக உயர்ந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

நடப்பு நிதி ஆண்டில் மொபைல் போன் உற்பத்தி நான்கு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மொபைல் போன் ஏற்றுமதி முன் எப்போதும் இல்லாத வகையில் ஒரு லட்சத்து 29 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இத்துறையில் கடந்த பத்து ஆண்டுகளில் 12 லட்சம் பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை பெற்றிருப்பதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாட்டில் கடந்த டிசம்பர் மாதம் வரை ஒரு லட்சத்து 57 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அவர் அளித்துள்ள பதிலில், 2016-ஆம் ஆண்டு முதல் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகக் கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர், ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை பரவலாக்கும் திட்டம் நாடு முழுவதும் உள்ள 590 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் இதுவரை மூன்றரை லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்திருப்பதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திரு ராமநாத்தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான எண்ணம் அரசிடம் தற்போது இல்லை என்று கூறியுள்ளார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் இயற்கை பேரிடர் காரணமாக நடப்பு நிதி ஆண்டில் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து 36 பேர் உயிரிழந்துள்ளதாக உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்தராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விக்கு ஒன்று பதிலளித்த அவர், இமாச்சல பிரதேசத்தில் நேரிட்ட இயற்கை பேரிடர்களில் அதிகபட்சமாக 408 பேர் உயிரிழந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் நான்கு லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்துள்ளதாக திரு நித்யானந்தராய் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கப்பதிவு நாளை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு நாளை காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

70 உறுப்பினர்கள் கொண்ட தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் மற்றும் சுயேட்சைகள் உட்பட மொத்தம் 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதில் சுமார் ஒரு கோடியே 56 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

தேர்தலை சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கு ஏதுவாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் காவல்துறை மற்றும் துணை ராணுவப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிம் பேசிய காவல் குற்றப்பிரிவு சிறப்பு ஆணையர் திரு தேவேஸ் சந்திர ஸ்ரீவஸ்தவா, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வரும் வகையில் ஓராண்டு காலத்திற்கான ஆயுஷ் விசா வழங்கப்படும் என்று மத்திய ஆயுஷ் துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அவர் அளித்துள்ள பதிலில், இந்த விசா மூலம் வெளிநாட்டு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக மூன்று முறை இந்தியாவுக்கு வர அனுமதி அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்த விசா அனுமதி வெளிநாட்டில் உள்ள மண்டல பதிவு அலுவலகத்தின் மூலம் மேலும் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாகால நீட்டிப்பை பெறுவதற்கு நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையிலிருந்து மருத்துவ சான்றிதழ் சமர்பிக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

மருத்துவ சிகிச்சைக்கான முழு செலவையும் தங்களது சொந்த கணக்கிலேயே மேற்கொள்வதற்கான சான்றையும் அவர்கள் வழங்க வேண்டுமென்றும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ நா பொதுச்சபைத் தலைவர் திரு **Philemon yang** நான்கு நாள் பயணமாக இன்று மாலை இந்தியா வந்தடைந்தார்.

புதுதில்லி வந்த அவருக்கு மத்திய அரசின் சார்பில் சிறப்பான

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த பயணத்தின்போது அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடன் பேச்சு நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது மண்டல மற்றும் சர்வதேச அளவிலான பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வையும் திரு யாங் சந்திக்க உள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா – பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் மூவாயிரத்து 232 கிலோமீட்டர் நீளத்திற்கு வேலி அமைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில், எல்லைப் பகுதிகளில் குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் இந்த வேலி அமைக்கப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக வேலி அமைக்கும் பணிகள் குறித்து பங்களாதேஷ் அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிதாந்த் பாந்தியா, பரிக்ஷித் சொமானி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.
சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 3-6, 10-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் சாய் கார்த்திக் - விஷ்ணவர்தன் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

சிங்கப்பூர் ஸ்மாஷ் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் தியா சிட்டாலே – மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.
இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-4, 11-5, 5-11, 11-7 என்ற செட் கண்க்கில் மெக்ஸிகோ இணையை வென்றது.
மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யஷஸ்வினி கார்படே – ஆஸ்திரேலியாவின் மின் யூங் ஜி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

அர்ஜென்டினாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

***End of News***